# கோட்டக்குப்பம் நகராட்சி

## சாதாரணகூட்டம்

**2025ம் ஆண்டு ஜீன் மாதம் 27ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கோட்டக்குப்பம் நகராட்சியில் சாதாரணக் கூட்டம் நகர் மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.**

**தலைமை.திரு.ச.ஜெயமூர்த்தி, நகர் மன்ற தலைவர்,**
**கோட்டக்குப்பம் நகராட்சி**

கோட்டக்குப்பம் நகராட்சி வார்டு எண்.14, திரு.ம.சுகுமார் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் நாள்.17.06.2025.

கோட்டக்குப்பம் நகராட்சி பேரூராட்சியாக இருந்த காலத்தில் 1996 முதல் 2001 வரை பேரூராட்சி மன்ற தலைவராக பதவி வகித்து வந்த முன்னாள் தலைவர் திரு.S.சண்முகம், அவர்கள் 10.06.2025 அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் ஆன்மா இறைவனடி சேர கோட்டக்குப்பம் நகரமன்றத்தின் சார்பாக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்துதல்.

**அலுவலக குறிப்பு**

மௌன அஞ்சலி செலுத்த மன்ற தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**<u>பொருள் எண்.01</u>**

கோட்டக்குப்பம் நகராட்சியில் வார்டு எண்.12, ஜமியத் நகர் முதல் எம்.ஜி.ரோடு வரை உள்ள சக்கிலி வாய்க்காலில் மழைநீர் சீரான முறையில் செல்ல வழிவகை செய்யப்பட வேண்டி உள்ளதால் மேற்கண்ட இடத்தினை தூர்வாரும் பணி மேற்கொள்ள ரூ.3.50 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 767/2025/இ1)

**தீர்மான எண்: 918**

(அனுமதிக்கப்பட்டது)

**<u>பொருள் எண்.02</u>**

கோட்டக்குப்பம் நகராட்சியில் வார்டு எண்.27, சோதனைகுப்பம் பகுதியில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பகிர்மான குழாய் 25 ஆண்டுகளுக்கு கடந்த நிலையில் உள்ளதால் பொது மக்களுக்கு சீரான முறையில்

குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. ஆகையால் மகளிர் காவல் நிலையம் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து சோதனைக்குப்பம் வரை புதியதாக UPVC 80mm பகிர்மான குழாயாக மாற்றியமைக்க ரூ.18.50 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் குடிநீர் நிதி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.768/2025/இ1)

**தீர்மான எண்:** 919

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.03</u>

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட பழைய பட்டிணம் பாதை, நாட்டாண்மைக்கார் தெரு பகுதிகளில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பகிர்மான குழாய் 25 ஆண்டுகளுக்கு கடந்த நிலையிலும் பகிர்மான குழாய் 7 அடி ஆழத்தில் இருப்பதால் பல்வேறு பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே குடிநீர் அவசர அவசியம் கருத்தில் கொண்டு பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க ஏதுவாக அலுவலக குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து மேற்கண்ட பகுதிகளில் புதியதாக UPVC 80mm பகிர்மான குழாய் அமைக்க தோராய செலவினம் ரூ.18,30,000/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.769/2025/இ1)

**தீர்மான எண்:** 920

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.04</u>

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 மோர்சார் தெரு, அணைக்குடியார் தெரு, மற்றும் குட்டவாப்பு தெரு பகுதிகளில் பகிர்மான குழாய்

பழுதாகி விட்டதால் அப்பகுதி பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே குடிநீர் அவசர அவசியம் கருத்தில் கொண்டு பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க புதிய பகிர்மான குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.15,00,000/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டபடுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 770/2025/இ1)

**தீர்மான எண்:** 921

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.05</u>

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25 நகராட்சி அலுவலகம் முதல் சின்னகோட்டக்குப்பம் பாதை வரை பகிர்மான குழாய் பழுதாகி விட்டதால் அப்பகுதி பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே குடிநீர் அவசர அவசியம் கருத்தில் கொண்டு பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க புதிய பகிர்மான குழாய் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.19,80,000/- இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டபடுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.774/2025/இ1)

**தீர்மான எண்:** 922

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.06</u>

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 27 வரை உள்ள பிரதான குழாய் 21.75 கி.மீ மற்றும் பகிர்மான குழாய் 88.50 கி.மீ உள்ளது. இப்பைப்லைன்கள் 25 ஆண்டுகள் கடந்த நிலையில் இருப்பதால் பைப்லைன்

அடிக்கடி பழுது ஏற்பட்டு வருவதால் பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டி உள்ளது. எனவே குடிநீர் குழாய் பழுதுகளை சரிபார்க்க ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.19,90,000/- இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.777/2025/இ1)

**தீர்மான எண்:** 923

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.07</u>

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 27 வரை மொத்த குடியிருப்பு 8981 உள்ளது. இக்குடியிருப்புகளில் 5447 குடிநீர் இணைப்புகள் மட்டுமே உள்ளது. மேலும் இந்நகராட்சி வளர்ந்து வரம் நகராட்சி என்பதால், இந்நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகள் அதிகரித்து வருதாலும், இந்நகராட்சி பகுதியில் புதியதாக குடிநீர் இணைப்புகள் வழங்குதல், அடைப்புகள் சரி செய்தல், மறு இணைப்பு வழங்கும் பணி மற்றும் சாலை பராமரிப்பு ஆகிய பணிகளை ஆட்களை வைத்து உடனுக்குடன் மேற்கொள்ள மிகவும் சிரமமாக இருப்பதாலும் மற்றும் பிளம்பர் பணிகள் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதாலும், பொது மக்களிடமிருந்து குடிநீர் இணைப்பிற்கு வசூலிக்கப்படும் தொகையின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பணிகளுக்கு தோராய செலவினம் ரூ.19,90,000/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.783/2025/இ1)

**தீர்மான எண்:** 924

(அனுமதிக்கப்பட்டது)

பொருள் எண்.08

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08, கோட்டைமேடு தென்னந்தோப்பு பகுதியில் சிமெண்ட் சாலை குண்டும் குழியுமாக உள்ளதாலும், பொது மக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால் அப்பகுதியில் 120.00 மீட்டர் நீளத்திற்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்க தோராய செலவினம் ரூ.6.00/- இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 785/2025/இ1)

**தீர்மான எண்:** 925

(அனுமதிக்கப்பட்டது)

பொருள் எண்.09

கோட்டக்குப்பம் நகராட்சி வார்டு எண்.5, சுனாமி குடியிருப்புகளில் அதிக குடிநீர் இணைப்புகள் உள்ளதால் ராஜீவ் நகர் பகுதியில் குடிநீர் சப்ளை பாதிக்கப்படுகிறது. எனவே ராஜீவ் நகர் பகுதி மக்களுக்கு தேவையான குடிநீர் சீரான முறையில் வழங்க தோராய செலவினம் ரூ.9.50 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.772/2025/இ1)

**தீர்மான எண்:** 926

(அனுமதிக்கப்பட்டது)

பொருள் எண்.10

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15, ஹக்கீம் நாட்டாண்மைகாரத் தெரு பகுதியில் மழைகாலங்களில் வெள்ளநீர் குடியிருப்புகளுக்கு புகுவதால் அப்பகுதியில் போர்வெல்லுடன் கூடிய மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்திட தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 784/2025/இ1)

**தீர்மான எண்:** 927

(அனுமதிக்கப்பட்டது)

**<u>பொருள் எண்.11</u>**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 16, புதுத் தெரு 4வது தெரு மற்றும் பழைய பட்டணம் பாதை பகுதியில் வடிகால் இல்லாததால் அப்பகுதிகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தெருக்களில் தேங்கியுள்ளதால் அப்பகுதியில் புதியதாக வடிகாலுடன் கூடிய கவர் சிலாப் அமைக்க தோராய செலவினம் ரூ. 5.50 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 800/2025/இ1)

**தீர்மான எண்:** 928

(அனுமதிக்கப்பட்டது)

**<u>பொருள் எண்.12</u>**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10, அம்பேத்கார் தெருவில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்க 19.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி துவங்கும் போது அப்பகுதி பொது மக்களால் பேவர் பிளாக் சாலைக்கு பதிலாக சிமெண்ட் சாலை அமைக்க கோரி பணியினை தடுத்து நிறுத்தப்பட்டதால் அதே மதிப்பீட்டில் அப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கு பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2225/2023/இ1)

**தீர்மான எண்:** 929

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.13**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் அமைக்கப்பட்டு அங்கன்வாடியில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பு கருதி அங்கன்வாடி மையத்தினை சுற்றி சுற்று சுவர் மற்றும் பிளாட்பார்ம் அமைக்க தோராய செலவினம் ரூ. 3.00 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 795/2025/இ1)

**தீர்மான எண்:** 930

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.14**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6, எம்.ஜி.ஆர் நகர் விரிவாக்கம், வார்டு எண்.12, ஜமியத் நகர், வார்டு எண்.22, பர்கத் நகர் 8வது கிராஸ் எதிரில், மற்றும் வார்டு எண்.26, மரைக்காயர் தோப்பு ஆகிய பகுதிகளில் குடிநீர் இணைப்பிற்க்கு லைப்லைன் இல்லததாலும், புதிய குடிநீர் இணைப்பிற்க்கு மனு வரப்படுதாலும் புதியதாக பிவிசி பைப்லைன் அமைக்க செலவினம் ரூ.9.20 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.801/2025/இ1)

**தீர்மான எண்:** 931

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.15**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 21, இப்ராஹிம் கார்டன் முதல் தெருவில் மழைகாலங்களில் மழைநீர் சாலையில் குளம்போல் தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்கும் மற்றும் பள்ளிக்கு குழந்தைகளுக்கும் இடையூறாக இருப்பதால் அப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க தோராய செலவினம் ரூ.4.00 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.802/2025/இ1)

**தீர்மான எண்:** 932
(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.16**

எதிர்வரும் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு இந்நகராட்சியில் உள்ள கால்வாய்கள் (வெள்ளவாரி ஓடை, ஒத்தவாடை ஓடை) மற்றும் குளம் குட்டைகளை இட்டாச்சி இயந்திரம் கொண்டு தூர்வாரும் பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.7.50/– இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.773/2025/இ1)

**தீர்மான எண்:** 933
(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.17**

கோட்டக்குப்பம் நகராட்சியில் வார்டு எண்.02, பெரிய முதலியார் சாவடி, வார்டு எண்.21, இப்ராஹிம் கார்டன், வார்டு எண்.22, பர்கத் நகர் மற்றும் வார்டு எண்.23, முத்து சிங்காரம் நகரில் அமைந்துள்ள 4 எண்ணிக்கை கழிவு நீர் மின்மோட்டார்களை பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.17.50 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
அ) மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.776/2025/இ1)

**தீர்மான எண்:** 934
(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.18**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மையம் அமைக்க வார்டு எண்.08 கோட்டைமேடு உரப்பூங்கா அருகில் ABC Centre வுடன் கூடிய சுற்றுச்சுவர் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.15,00,000/– இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 782/2025/இ1)

**தீர்மான எண்:** 935

(அனுமதிக்கப்பட்டது)

**<u>பொருள் எண்.19</u>**

எதிர்வரும் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு இந்நகராட்சி பகுதியில் Dewatering பணிகளை மேற்கொள்ள Dewatering மோட்டார் (5HP –4, 8HP–1, 3HP–1 & 1HP–1) 7 எண்ணிக்கை மோட்டார்களை பழுது நீக்கம் செய்து தயார் நிலையில் வைத்து கொள்ள செலவினம் ரூ.1.50/– இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 779/2025/இ1)

**தீர்மான எண்:** 936

(அனுமதிக்கப்பட்டது)

**<u>பொருள் எண்.20</u>**

கோட்டக்குப்பம் நகராட்சியில் இயங்கி வரும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதனை உடனுக்குடன் சரி செய்ய ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.5.00 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.530/2025/இ1)

**தீர்மான எண்:** 937

(அனுமதிக்கப்பட்டது)

**<u>பொருள் எண்.21</u>**

கோட்டக்குப்பம் நகராட்சியில் 6th SFC Grand நிதியின் கீழ் வணிக வாளகம் கட்டுவதற்கு பெரியமுதலியார்சாவடி பகுதியில் இடம் தேர்வு செய்து ரூ.1.48/– கோடிக்கு நிதி ஒதிக்கீடு செய்து 03.09.2024 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது, ஆனால் பணியினை மேற்கொள்ளும் போது பொதுமக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு பணிகள் நிறுத்தி வைக்கப்படடுள்ளது. மேற்கண்ட இடம் இந்து

அறநிலை துறைக்கு சொந்தமாக உள்ளதால் மேற்கண்ட பணியினை செய்ய இயலவில்லை. எனவே மாற்று இடத்தில் கட்டுவதற்கு இந்நகராட்சியில் போதிய இடவசதி இல்லாததால் மேற்கண்ட பணியினை இரத்து செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2127/2023/இ1)

**தீர்மான எண்:** 938

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.22</u>

கோட்டக்குப்பம் நகராட்சி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் ரூ.42.50 இலட்சம் மதிப்பீட்டில் மறு சுழற்ச்சி மையம் (Material Recovery Facilities) அமைக்க நிர்வாக அனுமதி வழுங்கப்பட்தை தொடர்ந்து பணியினை மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் பணியினை மேற்கொள்ளும் போது அப்பகுதி குடியிருப்புவாசிகள் பணியினை செய்யவிடாமல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மறு சுழற்ச்சி மையம் (Material Recovery Facilities) அமைக்க 17 இடங்கள் கிராம நிர்வாக உதவியாளர் அவர்களுடன் நேராய்வு செய்து பல்வேறு இடங்களும் MRF அமைக்க வழிவகை இல்லை என்பதால் கோட்டக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான கோட்டைமேடு, உரப்பூங்கா சர்வே எண்.184/1ல் மறு சுழற்ச்சி மையம் (Material Recovery Facilities) அமைக்க மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதே திட்ட மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 477 /2024/இ1)

**தீர்மான எண்:** 939

(அனுமதிக்கப்பட்டது)

பொருள் எண்.23

கோட்டக்குப்பம் நகராட்சியில் வார்டு 01 முதல் 27 வரை உள்ள வார்டுகளில் வசிக்கும் பொது மக்களுக்கு 18 மின்மோட்டார்கள் மற்றும் 3 தரை தள தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அடிக்கடி ஏற்படும் குறைந்த மின் அழுத்தம் காரணமாகவும், மின்தடை காரணமான மின்மோட்டார்கள் பழுது ஏற்படுகிறது. அம்மின்மோட்டார்களை பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.18.50 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் குடிநீர் நிதி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.771/2025/இ1)

**தீர்மான எண்:** 940

(அனுமதிக்கப்பட்டது)

பொருள் எண்.24

கோட்டக்குப்பம் நகராட்சியில் பணிபுரியும் ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் பெயர் பலகை அமைக்கும் பணிக்கு தோராய செலவினம் ரூ.25,000/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 775 /2025/இ1)

**தீர்மான எண்:** 941

(அனுமதிக்கப்பட்டது)

பொருள் எண்.25

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 27 வரை உள்ள தெருமின் விளக்குகள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் பழுது நீக்கத்தினை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்ய புதிய தெருமின் விளக்குகள் 36w - 100 No's, 50w - 50 No's, 100w - 25 No's, MCB - 15 No's, 7/16 wires - 5 Coil மற்றும் Tape - 5 பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தெருமின் விளக்குகள் ரூ.4.50/- இலட்சத்திற்கு இந்நகராட்சியின் வருவாய் நிதியின் கொள்முதல் செய்ததினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.780/2025/இ1)

**தீர்மான எண்:** 942

(அனுமதிக்கப்பட்டது)

பொருள் எண்.26

விழுப்புரம் மாவட்ட தகவல் களஞ்சியம் மலரில் மே தினத்தை முன்னிட்டு கோட்டக்குப்பம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள் குறித்து சிறப்பு மலராக வெளியிட தோராய செலவினம் ரூ.1.40 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.446/2025/இ1)

**தீர்மான எண்:** 943

(அனுமதிக்கப்பட்டது)

பொருள் எண்.27

தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனையினை பொது மக்கள் அறியும் வகையில் கோட்டக்குப்பம் நகராட்சில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள் குறித்து நான்காண்டு சாதனை சிறப்பு மலராக வெளியிட தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.486/2025/இ1)

**தீர்மான எண்:** 944

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.28**

கோட்டக்குப்பம் நகராட்சியில் ஆணையாளரின் அலுவலக பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் பழுது ஏற்பட்டுள்ளதால் அவற்றினை இயக்க இயலவில்லை, எனவே ஈப்பு வாகனத்தினை பழுது நீக்கம் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.45,300/– மட்டும் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.199/2018/இ1)

**தீர்மான எண்: 945**

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.29**

கோட்டக்குப்பம் நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் ஆணையாளர், நகராட்சி பொறியாளர், நகர் மன்ற தலைவர் அவர்களின் ஈப்பு வாகனத்திற்கு காப்பீடு முடிவுற்ற நிலையில் மேற்படி வாகனங்களுக்கு காப்பீடு தொகை செலுத்த செலவினம் ரூ.31,999/– மட்டும் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.199/2018/இ1)

**தீர்மான எண்: 946**

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.30**

கோட்டக்குப்பம் நகராட்சியில் வளர்ச்சிக்கு ஏற்ப கீழ்நிலை பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டத நிலையில் கீழ்காணும் அலுவலக பணிகளை கருத்தில் கொண்டு UTIS பணிகள், கணினி பணிகள், தட்டச்சு பணிகள், கழிவு நீர் வாகனம் இயக்குபவர் மற்றும் பொது கழிவறைகள் பராமரிப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 01.07.2025 முதல் 31.03.2026 வரை ஒன்பது

மாதத்திற்கு கீழ்காணும் விவரப்படி ஒப்பந்த பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.16,50,000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் அலுவலக கோப்புகளை தட்டச்சு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் கணினியில் UTIS தொடர்பான தகவல்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் பொறியாளர் பிரிவு தட்டச்சு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 4 கணினி இயக்குபவருக்கு 9 மாதங்களுக்கு (01.07.2025 முதல் 31.03.2026) ஊதியம் | ரூ.16,50,000/– |
| 2 | கோட்டக்குப்பம் நகராட்சியின் கழிவுநீர் வாகனத்தினை இயக்கிட ஒப்பந்த அடிப்படையில் 1 பணியாளர்கள் 9 மாதங்களுக்கு (01.07.2025 முதல் 31.03.2026) ஊதியம் | |
| 3 | கோட்டக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான 11 பொது கழிவறைகளை சுத்தம் செய்வதற்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் கழிவறை சுத்தம் செய்யும் பணியினை மேற்கொள்ள 4 பணியாளர்கள் 9 மாதங்களுக்கு (01.07.2025 முதல் 31.03.2026) ஊதியம் | |

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.669 /2025 /இ1)

**தீர்மான எண்:** 947

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.31</u>

கோட்டக்குப்பம் நகராட்சியில் வளர்ச்சிக்கு ஏற்ப கீழ்நிலை பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டத நிலையில் கீழ்காணும் அலுவலக பணிகளை கருத்தில் கொண்டு தொழில்நுட்ப உதவியாளர்கள், பூங்கா, உரப்பூங்கா காவலர், இரவு காவல், தெருமின் விளக்கு பராமரிப்பு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 01.07.2025 முதல் 31.03.2026 வரை ஒன்பது மாதத்திற்கு கீழ்காணும் விவரப்படி ஒப்பந்த பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.16,50,000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கோட்டக்குப்பம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் தொழில்நுட்ப பணிகளை மேற்கொள்ள 2 தொழில் நுட்ப உதவியாளர்கள் 9 மாதங்களுக்கு (01.07.2025 முதல் 31.03.2026) ஊதியம் | ரூ.16,50,000/- |
| 2 | இந்நகராட்சியில் 1623 தெருமின் விளக்குகளை பராமரிப்பதற்கு போதிய பணியாளர்கள் இல்லாதால் இப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 2 பணியாளர்களுக்கு 9 மாதங்களுக்கு (01.07.2025 முதல் 31.03.2026) ஊதியம் | |
| 3 | கோட்டக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா, உரப்பூங்கா காவலர், இரவு காவல் பணிக்கு 4 பணியாளர்கள் 9 மாதங்களுக்கு (01.07.2025 முதல் 31.03.2026) ஊதியம் | |

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.669/2025 /இ1)

**தீர்மான எண்:** 948

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.32</u>

கோட்டக்குப்பம் நகராட்சியில் வளர்ச்சிக்கு ஏற்ப கீழ்நிலை பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாத நிலையில் கீழ்காணும் அலுவலக பணிகளை கருத்தில் கொண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் தரைத்தள தொட்டிகள் இயக்குவதற்கு 5 பணியாளார்கள், இந்நகராட்சியில் ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் வாகனங்களை இயக்கிட மூன்று ஓட்டுநர் மற்றும் உரப்பூங்கா இரவு காவல் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 01.07.2025 முதல் 31.03.2026 வரை ஒன்பது மாதத்திற்கு கீழ்காணும் விவரப்படி ஒப்பந்த பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.17,00,000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கோட்டக்குப்பம் நகராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் கழிவுநீர் தரைத்தள தொட்டிகளை இயக்குவதற்கு 5 நபர்கள் 9 மாதங்களுக்கு (01.07.2025 முதல் 31.03.2026) ஊதியம் | ரூ.17,00,000/- |

| | | |
|---|---|---|
| 2 | கோட்டக்குப்பம் நகராட்சியின் ஆணையாளர், நகர்மன்ற தலைவர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஈப்பு வாகனத்தினை இயக்கிட ஒப்பந்த அடிப்படையில் 3 பணியாளர்கள் 9 மாதங்களுக்கு (01.07.2025 முதல் 31.03.2026) ஊதியம் | |

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.669/2025 /இ1)

**தீர்மான எண்:** 949

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.33</u>

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 27 வரை புதியதாக குடிநீர் இணைப்பு வழங்குதல் மற்றும் பைப்லைன் உடைப்பு, அடைப்பு, கசிவு ஆகிய பணிகளை மேற்கொள்ள சிமெண்ட் சாலை மற்றும் தார் சாலைகளை உடைப்பதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால் சாலைகளை உடைக்க ஏதுவாக புதியதாக Forte Demolition Hammer machine 16kg 1700w கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூ.32,000/- மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.612/2025/இ1)

**தீர்மான எண்:** 950

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.34</u>

கோட்டக்குப்பம் நகராட்சியில் மூலதன மான்ய நிதி & இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2023-24ன் கீழ் குடிநீர் விநியோகம் செய்ய பைப்லைன் அமைக்க பணி ஆணை வழங்கியதை தொடர்ந்து ஆரோவில் சந்திப்பு சாலை முதல் ரவுண்டானா வரை 2 இடங்களில் Trenchless முறையில் பைப்லைன்கள் அமைக்க சாலை பராமரிப்பு கட்டணம் மற்றும் Centage Charges கட்டணம் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை துறை, விழுப்புரம் அவர்களுக்கு தொகை செலுத்த

செலவினம் ரூ.23,000/– மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.656/2023/இ1)

**தீர்மான எண்: 951**

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.35</u>

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறு மூலம் பொது மக்களுக்கு தினசரி விநியோகம் செய்யும் குடிநீரினை மூன்நாம் நபர் பகுப்பாய்வு ஆய்வு செய்தது செலவின தொகை ரூ.29,736/– மட்டும் இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.992/2023/இ1)

**தீர்மான எண்: 952**

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.36</u>

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13, மேயர் சண்முகா நகரில் புதியதாக அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றுக்கு புதியதாக மின் இணைப்பு வழங்க செலவின தொகை ரூ.81,720/– மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1186/2024/இ1)

**தீர்மான எண்: 953**

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.37**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.08, கோட்டைமேடு வெள்ளவாரி ஓடை பகுதியில் 15வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் புதியதாக அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றுக்கு புதியதாக மின் இணைப்பு வழங்க செலவின தொகை ரூ.81,720/- மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.987/2023/இ1)

**தீர்மான எண்:** 954

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.38**

மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் அவர்களின் அறிவுரையின்படி, கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்ய தேவையான Butterfly net, மற்றும் மருந்து பொருட்கள் வாங்கியது செலவினத் தொகை ரூ.1.70/- மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 781/2025/இ1)

**தீர்மான எண்:** 955

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.39**

மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் அவர்களின் அறிவுரையின்படி, கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்யும் கொத்துவாப்பள்ளி அறைக்கு தேவையான அடிப்படை வசதிகளான மின்மோட்டார், Tank பைப்லைன் அமைத்து குடிநீர் வசதிகள் ஏற்படுத்தியது தோராய செலவினத் தொகை ரூ.1.30/- மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 782/2025/இ1)

**தீர்மான எண்:** 956

(அனுமதிக்கப்பட்டது)

பொருள் எண்.40

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பைப்லைன் உடைப்புகளை ஜெ.சி.பி. இயந்திரம் மூலம் பழுதுகளை சரிபார்க்கவும் மற்றும் தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யவும் தோராய செலவினத் தொகை ரூ.1.80/– மட்டும் இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.169/2025/இ1)

**தீர்மான எண்:** 957

(அனுமதிக்கப்பட்டது)

பொருள் எண்.41

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 குயிலாப்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள அமைந்துள்ள இடத்தில் உள்ள போர்வெல் செம்மண் கலந்து குடிநீரில் கலப்பதால், பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வது சிரமமாக உள்ளது. எனவே குடிநீரின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு ஏர்கம்பரசர் மூலம் போர்வெல் சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.34,000/– மட்டும் இந்நகராட்சி குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2010/2024/இ1)

**தீர்மான எண்:** 958

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.42**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08, கோட்டைமேடு குடிநீர் ஆழ்துளை மின்மோட்டாரின் 40HP BCH ஸ்டார்டர் பழுது ஏற்பட்டுள்ளதால் அம்மின்மோட்டாரினை பழுதினை சரி செய்ய தோராய செலவினம் ரூ.16,000/- மட்டும் இந்நகராட்சி குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 286/2025/இ1)

**தீர்மான எண்:** 959

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.43**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட சின்ன கோட்டக்குப்பம் இருளர் காலனி-1, போர்வெல் மோட்டார் மற்றும் சின்ன கோட்டக்குப்பம் கழிவு மோட்டார் ஸ்டார்டர் பழுது ஏற்பட்டுள்ளதால், அம்மின்மோட்டார்களை பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.22,000/- மட்டும் இந்நகராட்சி குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2009/2024/இ1)

**தீர்மான எண்:** 960

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.44**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 27 வரை 10 No's சமுதாய கழிப்பிடம் மற்றும் 2 No's பொது கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளது. அக்கழிவறைகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அனைத்து கழிவறைகளையும் மத்திய அரசால் நேரடியாக ஆய்வு மேற்கொள்ள அறிக்கை சமர்ப்பிக்க உள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொலி ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கழிவறைகளில் முகப்பு கண்ணாடி, மின்சார வசதிகள், Tap, Towel Ring ஆகிய பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.50,000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 617/2025/இ1)

**தீர்மான எண்: 961**

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.45**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 27 வரை பல்வேறு இடங்களில் ஏற்படும் பைப்லைன் உடைப்புகள் , அடைப்பு நீக்கம், பிரதான குழாய் உடைப்பு மற்றும் புதிய அலுவலக கட்டிடம் அமைக்கு இடத்தில் 8" பிவிசி பைப்லைன் மாற்றி அமைத்தல் மற்றும் இதர பணிகளுக்கு தேவையான பைப்லைன் பொருட்கள் கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூ.5.00/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1389/2023/இ1)

**தீர்மான எண்: 962**

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.46**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட சின்ன கோட்டக்குப்பம் இருளர் காலனி-2 குடிநீர் ஆழ்துளை மின்மோட்டாரின் 40HP BCH ஸ்டார்டர் பழுது ஏற்பட்டுள்ளதால், குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் அம்மின்மோட்டாரினை பழுதினை சரி செய்ய தோராய செலவினம் ரூ.24,000/- மட்டும் இந்நகராட்சி குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 616/2025/இ1)

**தீர்மான எண்:** 963

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.47**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08, கோட்டைமேடு குடிநீர் ஆழ்துளை கிணற்றின் மின்மோட்டாரில் உள்ள கேபிள்கள் எரிந்து மின்மோட்டாரை இயக்க முடியவில்லை. ஆகையால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே குடிநீரின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மின்மோட்டாரினை பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.20,000/- மட்டும் இந்நகராட்சி குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 619/2025/இ1)

**தீர்மான எண்:** 964

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.48**

கோட்டக்குப்பம் நகராட்சியில் வார்டு எண்.23, முத்துசிங்காரம் நகரில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டியின் 3HP கழிவு நீர் மோட்டார் பழுதாகியுள்ளதால் சின்ன கோட்டக்குப்பம் பகுதியில் உள்ள அனைத்து தெருக்களிலும் கழிவுநீர் தேங்கி குடியிருப்பு பகுதிகளில் புகுந்துள்ளதாக, அப்பகுதி பொது மக்களிடமிருந்து புகார் வந்த வண்ணம் உள்ளதால் பொது மக்களின் நலன் கருதி புதியதாக 3HP மின்மோட்டார் கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூ.48,000/- மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 815/2025/ இ1)

**தீர்மான எண்:** 965

(அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண்.49**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட புதிய குடிநீர் இணைப்பு வழங்க சாலை துண்டிப்பு செய்ய புதியதாக Forte Demolition Hammer machine 16kg 1700w கொள்முதல் செய்ய 22.04.2025 அன்று விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் 29.04.2025 அன்று கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விபரம் | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | | |
|---|---|---|---|---|
| | | M/s. Meenu Industries | M/s. PKP Construcion | M/s. Lifting Equipement Co., |
| 1 | புதியதாக Forte Demolition Hammer machine 16kg 1700w கொள்முதல் செய்தல் | 32750 | 31950 | 31440 |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்க மன்ற அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.612/2025/இ1)

**தீர்மான எண்:** 966

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.50</u>

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டதொடர் 14 மார்ச் 2025 அன்று துவங்கி நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்வதை பொது மக்கள் கூடும் பகுதிகளில் LED திரை, இருக்கைகள், நிழற்பந்தல் மற்றும் குடிநீர் வசதி அமைக்க 07.03.2025 அன்று விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் 12.03.2025 அன்று கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விபரம் | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | | |
|---|---|---|---|---|
| | | M/s. I mac Computer | M/s. I com Computer | M/s. Aurotek Automations |
| 1 | LED திரை, இருக்கைகள், நிழற்பந்தல் மற்றும் குடிநீர் வசதி செய்தல் | 47950/- | 42450/- | 36460/- |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்க மன்ற அனுமதிக்காக.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.526/2025/இ1)

**தீர்மான எண்:** 967

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.51</u>

கோட்டக்குப்பம் நகராட்சி வளாகத்தில் இயங்கி வரும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மோட்டார் பழுது சரி செய்ய 17.03.2025 அன்று விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் 26.03.2025 அன்று கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விபரம் | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | | |
|---|---|---|---|---|
| | | M/s. Megha Aqua Systems | M/s. AJ Water Tech Solution | M/s. Aqua Ro Systems |
| 1 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மோட்டார் பழுது செய்தல் | 44300/- | 39800/- | 41500/- |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்க மன்ற அனுமதிக்காக.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.530/2025/இ1)

**தீர்மான எண்:** 968

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.52</u>

கோட்டக்குப்பம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் (Tied & Untied Grant) 2023-24 கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் தெருமின் விளக்குளுக்கு CCMC பொருத்துதல் தலைப்பின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 16491/2022/EA-2 நாள்.27.02.2025ன் படி நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து 06.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் 25.03.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | விபரம் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளிகள்வரப்பெற்றவிபரம் | |
|---|---|---|---|---|
| | | | மதிப்பீடை விட குறைவு | மதிப்பீடை விட அதிகம் |
| | **Tied Grant** | | | |
| 1 | Purchase of 1 No of 15 Hp Submersible motor with Pumpset, 12.50Hp & 5.00Hp Sewage Motor and 80mm dia UPVC Column Pipes for Borewells (Standby) in Kottakuppam Municipality | 5.00 | M/s. Meenu Industries PVT LTD 0.07% Below the Estimate | SBD Constructions 1.34% Above the Estimate |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | Providing New Borewell for Community Toilet at Ward No 5 in Kottakuppam Municipality | 1.64 | M/s. Meenu Industries PVT LTD 0.04% Below the Estimate | SBD Constructions 1.91% Above the Estimate |
| | **Untied Grant** | | | |
| 3 | Towards supply, delivery and installation of Single phase controller (17 nos) and Central Control Monitoring Centre (CCMC) time license (69 nos) to Kottakuppam Municipality | 9.60 | M/s. Midas Electricals PVT Ltd 0.00% Below the Estimate | Delight Electrical and Engineering 1.14% Above the Estimate |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியநிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு.

<u>அலுவலககுறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி 27.03.2025 அன்று நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.320/2024/இ1)

**தீர்மான எண்:** 969

(அனுமதிக்கப்பட்டது)

<u>பொருள் எண்.53</u>

கோட்டக்குப்பம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2025-26ன் கீழ் தார், சிமெண்ட் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.9730/2025/SS1 நாள்.02.04.2025ன் படி நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து 08.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் 28.04.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | விபரம் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | |
|---|---|---|---|---|
| | | | மதிப்பீட்டைவிட குறைவு | மதிப்பீட்டைவிட அதிகம் |
| **Package – II ( B.T Road)** | | | | |
| 1 | Chinna Mudaliyar Chavady to Diwankandapa Nagar 175005R0094, Purathoppu (Akbar Street) 175008R0215, Bharathi Nagar Main Road 175009R0216,Pazhaya Pattinam Pathai 175009R0223, Nadukuppam Pathai 175009R0224, Jamiyath Nagar 3rd Main Road 175012R0254 Bajar Street 175017R0378, Old Auroville Road 175013R0313, Kottaimedu Main Road to Kuilapalayam 175008R0182, Kottaimedu Main Road 175008R0181, Anna Nagar Main Road 175008R0189 | 290.00 | M/s. Meenu 0.07% Below the Estimate | M/s. Kumaresan Construction 1.89% Above the Estimate |
| **Package – I (Cement concrete Road)** | | | | |
